



வீடூர் அணை முழு கொள்ளளவை எட்டி உள்ளதால் 9 கண் வழியாக வினாடிக்கு 8000 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதை வனத்துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி அவர்கள் ஆய்வு மேற்கொண்டு , மாவட்ட ஆட்சியர் சி பழனி உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகளுடன் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்தார். மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் ம.ஜெயச்சந்திரன், விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ப.சேகர், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.மாசிலாமணி, சேதுநாதன்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.கே.பி.ரமேஷ், முன்னாள் நகரச் செயலாளர் கபிலன், ஒன்றியச் செயலாளர்கள் செழியன், ராஜாராமன், இளம்வழுதி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மழையால் சேதாரமான வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறி நிவாரணத் தொகையை தமிழக பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்ங. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் மதிவாணன், துவாக்குடி நகர செயலாளரும் நகர் மன்ற தலைவர் காயாம்பு, பகுதி செயலாளர் நீலமேகம், சிவகுமார், மாமன்ற உறுப்பினர் தாஜுதீன் மற்றும் திருச்சி வருவாய் கோட்டாட்சியர் அருள், திருவெறும்பூர் தாசில்தார் ஜெயபிரகாசம், அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### கன மழையின் காரணமாக நீர் நிரம்பிய செம்பரம்பாக்கம் ஏரி —

# பூண்டி சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்திலிருந்து உபரிநீர் திறப்பு!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

**சென்னை, டிச.16-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செம்பரம்பாக்கம் ஏரி, பூண்டி சத்திய மூர்த்தி சாகர் நீர்த்தேக்கம் ஆகியவற்றில் கன மழையின் காரணமாக நீர் நிரம்பி, உபரிநீர் வெளியேற்றப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்றுமுன்தினம் (13.12.2024) சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம் ஏரியில் கனமழையினால் நீர் நிரம்பியுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உபரிநீர் வெளியேற்றப்படுவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்டம் பூண்டி சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்பியுள்ளதையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உபரிநீர் வெளியேற்றப்படுவதையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**துணை முதல்வர் பேட்டி!**

காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் இருப்பு குறித்து ஆய்வு செய்த பின்னர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணத்தால், சென்னை மட்டுமன்றி பல மாவட்டங்களில் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்து வருகிறது. கன மழையால் சென்னையின் முக்கிய நீர்பிடிப்பு பகுதிகளாக உள்ள பூண்டி நீர்த்தேக்கம், செம்பரம்பாக்கம் ஏரி, புழல் ஏரிகளில் தண்ணீர் முழு கொள்ளவை எட்டியுள்ளது.

**ஏரிகளில் உபரி நீர் வெளியேற்றம்!**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், நானும், நம்முடைய மாவட்ட அமைச்சர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், நீர்வளத் துறை செயலாளர் அவர்களும் இன்றைக்கு செம்பரம்பாக்கம் ஏரியைத்தொடர்ந்து, பூண்டி நீர்த்தேக்கம், புழல் ஏரிகளில் ஆய்வு செய்ய இருக்கின்றோம்.

பூண்டி நீர்த்தேக்கத்தை பொறுத்தவரை 99.16 சதவீதம் அளவுக்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. பூண்டி நீர்த்தேக்கமானது, 3 ஆயிரத்து 231 மில்லியன் கன அடி கொள்ளளவை கொண்டது. தற்போது 3 ஆயிரத்து 204 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

கொசஸ்தலை ஆற்றில் 80 ஆயிரம் கன அடி அளவுக்கு தண்ணீர் செல்லக்கூடும். அந்த இடத்தில் 16 ஆயிரத்து 500 கன அடி அளவு தண்ணீர்மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது. எனவே, எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. எந்தவிதமான அச்சமும் பொதுமக்கள் அடையத் தேவையில்லை.

**முழுகொள்ளளவை எட்டிய செம்பரம்பாக்கம் ஏரி!**

அதேபோல, செம்பரம்பாக்கம் ஏரியின் முழு கொள்ளளவில் 96 சதவீதம் அளவுக்கு நீர் நிரம்பியுள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியைப் பொறுத்தவரை, முழு கொள்ளவான 3 ஆயிரத்து 645 மில்லியன் கன அடியில்,3 ஆயிரத்து 535 மில்லியன் கன அடி அளவுக்கு நீர் நிரம்பியுள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து விநாடிக்கு 32 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றலாம். அந்த இடத்தில் தற்போது, 4 ஆயிரத்து 632 கன அடிதண்ணீர் மட்டுமே வெளியேற்றப்பட்டு வருகிறது.

அதே போல, புழல் ஏரியின் முழு கொள்ளளவில்90 சதவீதம் அளவுக்கு நீர் நிரம்பியுள்ளது. புழல் ஏரியில் இருந்து விநாடிக்கு 7 ஆயிரத்து 200 கன அடி தண்ணீரை வெளியேற்றலாம். ஆனால், தற்போதுவரை, விநாடிக்கு 709 கன அடி தண்ணீர் மட்டுமே வெளியேற்றப்பட்டு வருகிறது.

**பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை!**

இவை அனைத்து இடங்களிலுமே வாய்க்கால்களின் முழு கொள்ளவுக்கு உட்பட்டே நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நீர் வெளியேற்றப்பட்டு வருவது தொடர்பான எச்சரிக்கை, நீர் வளத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ச்சியாக நேற்று இரவு முதல் விடுக்கப்பட்டுள்ளது.

இது முழுக்க, முழுக்க முன் எச்சரிக்கை நடவடிக்கை தான். இதனை அரசு தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த நேரத்தில் பொதுமக்கள் யாரும் எந்தவிதமான அச்சமோ, பயமோ கொள்ளத் தேவையில்லை. கனமழை நேரத்தில், அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**கேள்வி:** தென்மாவட்டங்களிலும் தற்போது அதிக அளவில் மழை பாதிப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது. தென் மாவட்டங்களுக்கு நீங்கள் ஆய்வுக்கு செல்ல வாய்ப்பு இருக்கிறதா?

**துணை முதலமைச்சர் பதில்:** காலையில் முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களை சந்தித்து சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பு அமைச்சர்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள். தேவைப்பட்டால் இன்று இரவோ அல்லது நாளை காலையோ சூழ் நிலைக்கேற்ப நிச்சயமாகஆய்வுக்கு செல்வேன்.

**பொதுமக்களின் பாதுகாப்பிற்கு முகாம்கள் தயார்!**

**கேள்வி:** எவ்வளவு மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய உதவிகள் செய்யப்பட்டு வருகிறதா?

**துணை முதலமைச்சர் பதில்:** தற்போது அனைத்து இடங்களிலும் முகாம்கள் தயாராக உள்ளது. மக்களுக்கான அனைத்தும் தயாராக உள்ளது. இன்றைக்கு சென்னையில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. இன்னும் 2 அல்லது 3 நாட்களுக்குப் பிறகு மழை வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போதும், அனைத்து முகாம்களும் தயாராக இருக்கும். மக்களிடம்கேட்டுக்கொள்வது தயவு செய்து பதட்டமோ, பீதியோ அடைய வேண்டாம். நிவாரண முகாம்களுக்கு சென்று பாதுகாப்பாகஇருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று துணை முதலமைச்சர்அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சந்திரன் (திருத்தணி), வி.ஜி.ஆர்.ராஜேந்திரன் (திருவள்ளூர்), நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் டாக்டர் த.பிரபு சங்கர் (திருவள்ளூர்), திருமதி கலைச்செல்வி மோகன், (காஞ்சிபுரம்) மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின்பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலி மாவட்டம் - பெரியார் சந்திப்புப் பேருந்து நிலையத்தில் வெள்ளநீரை தடுப்பதற்கு

# ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்குவதற்கு உத்தரவு!

## நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

நெல்லை, டிச.16-

திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு நாட்களாக பெய்து வரும் கன மழை காரணமாக பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கி பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சி பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் தேங்கிய மழைநீரை இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்ட இடங்களை தமிழ் நாடு சட்டமன்றத் பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் நேற்று (14.12.2024) பார்வையிட்டு ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த பல்வேறு பகுதிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு நேற்று இரண்டாவது நாளாக நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த துறை சார்ந்த அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கன மழை காரணமாக மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீரினால்; பாதிக்கப்பட்டது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாநகராட்சி பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் நிரந்திரமாக வெள்ளநீரை தடுப்பதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மழைநீர்; கால்வாய் அமைக்கும் பணிகள் தொடங்குவதற்கு அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.



இதன் காரணமாக இனி வரும் காலங்களில் பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் வெள்ளநீர் தேங்காதவாறு பணிகள் நடைபெறும்;. மேலும் நீர் செல்லும் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாத வகையில் பல்வேறு பகுதிகளில் இருந்து 20 ராட்சச மின் மோட்டார்கள் கொண்டு வரப்பட்டு நீர் வெளியேற்றும் பணிகள் ஈடுபடுத்தப்பட உள்ளது.

முக்கூடல் பாபநாசம் ஆலங்குளம் சாலையிலும் மழைநீர் வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை உடனடியாக சரிசெய்திட தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நெற்பயிர், வாழை, பிற தானியங்கள் சேதங்கள் குறித்து கணக்கீடு செய்யப்பட்டு கணக்கீடு நிறைவு பெற்ற பின் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டு சென்று தேவையான நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து வெள்ள நீரில் மக்கள் சிக்கிக்கொண்டால் அவர்களை மீட்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சி வர்த்தக மையத்தில் 6 நாட்டு படகு,தண்ணீரை வெளியேற்றும் மோட்டார்களுடன் 50 தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளதை பார்வையிட்டார்கள். சீவலப்பேரி தாமிரபரணி ஆற்றுப்பாலத்தை வெள்ளம் மூழ்கடித்து செல்வதையும், சேவியர் காலனியில் பாதிக்கப்பட்ட இடங்களில் இயந்திரங்கள் மூலம் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதையும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டு பணிகளை விரைந்து மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஃ தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் திரு.கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர்மரு.என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர்.கே.ஆர். ராஜூ, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன்,முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன் கான் உட்பட பலர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக தி.மு.க. இளைஞரணி சார்பில் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற பாக இளைஞரணி சமூக வலைதள பயிற்சி முகாமில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், சிவ.வீ. மெய்யநாதன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இளையராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அ.முகமது ரபீக், க.கவிக்குமார், இரா.தமிழராசு, நா.நசுருதீன், சே.அருண் குமார், மாவட்டத் துணைச் செயலாளர் ஸ்ரீதேவி அண்ணாத்துரை, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.கே.டி.தங்கமணி, கே.எஸ்.ரவி, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், பேரூர் கழக செயலாளர்கள் கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், மற்றும் பாக இளைஞரணி நிர்வாகிகள், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆர்ட்டிஸ்ட் முருகேசன், வீரசெல்வம், மா. ஜீனத் தீபக் ஐஸ்வர்யா, ஒய்.அருண் ஜார்ஜ், செந்தில்குமார் அண்ணலெட்சுமி, ஆர்.ஆனந்தராஜ், நா.விஜய் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

### புதுக்கோட்டை பொன்னமராவதி பேரூர் தி.மு.க. சார்பில்

# மாபெரும் பொதுக்கூட்டம்! நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - ஆரணி மாலா சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச 16 -

கழக இளைஞரணி செயலாளர், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொன்னமராவதியில் மாபெரும் பொதுக் கூட்டம் நலயத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (16.12.2024 - திங்கள்கிழமை) மாலை 5.00 மணியளவில் பட்ட மரத்தான்கோவில் அருகில், பொன்னமராவதி யில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தலைமையில் நடைபெறுகிறது. பொன்னமராவதி பேரூர் கழக செயலாளர் அ.அழகப்பன், பொன்னமராவதி தெற்கு ஒன்றிய செயலாளர் அ.அடைக்கல மணி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

அ.முத்து, எஸ்.ஜெயராமன், பொன்.ராமலிங்கம், அழகு. சிதம்பரம், வி.ஆர். இளையராஜா, இரா. கணேசன், சுதா அடைக்கலமணி, தனலெட்சுமி அழகப்பன்,

சுந்தரி அழகப்பன், ஆலவயல் ராமு, பெரி.அழகப்பன், கா.வெங்கடேஷ் மு.பாண்டியன்,

அழ.பழனிச்சாமி, ஆர். விஜயா, தி.சுப்பையா, சி. மணி, ஆ.சிக்கந்தர், பால சுப்பிரமணியன், அ.தட்சணாமூர்த்தி ஆர்.காளி தாஸ், ஆர்.விகாஸ் , எம். முத்துக்குமார், பி.கே.எஸ். செல்வகுமார் தி.ராஜா, மீனாட்சி மணிகண்டன், சுந்தரி இராமையா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக் கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், தலைமை கழக பேச்சாளர்கள் ஆரணி மாலா, பார்கவி, மாறன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

அறந்தாங்கி ராஜன், அண்ணாமலை ரகுபதி, எம்.எம்.அப்துல்லா எம்.பி, கவிச்சுடர் கவிதைபித்தன்,

பெரியண்ணன் அரசு பரணி கார்த்திகேயன், த. சந்திரசேகரன், த.மணிராஜன், சு.சண்முகம் அ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன், க.அடைக்கலம், அ.ஸ்ரீதேவி அண்ணாத் துரை, ஜெ.அபுதாஹீர், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், க.ராஜேந்திரன், அ.செந்தில்குமார், மேகலாமுத்து, சீனி.பழனியப்பன் என்.வீரையா , ஆர்.வி.செல்வம், கே.எம். சுப்பிரமணியன் சு.கலைவாணி, தேவி, பாத்திமா பீவி, அ.சின்னையா, க.ச.த.தென்னரசு, மணி அண்ணாத்துரை, ம.மணி, அ.ராமச்சந்திரன், சி.விஜயகுமார், ஆ.ராமன்,

அ.கருப்பையா, ஆலவயல் சண்முகம், சோம. தேனிமலை, ப.விஜயன், கை.நாகராஜன், சோலை செல்வம், அ.அடைக்கலம், தேலூர் சுப.சின்னையா, அ.சோமையா , ஆலவயல்

முரளிசுப்பையா, டி.எம்.கே.சுப்பிரமணியன், எம்.கணேசன், அஞ்சை காத்தான், ஆர். அப்பாஸ்,அ.சுரேஷ்குமார், சோம.நாகராஜன், த.பால சண்முகம், ப.குமார், ஆர். எம்.எஸ்.சேதுராமன், எஸ். முத்தையா, ஆலவயல் சாமிநாதன், உ.ராம லிங்கம், துர்கா தாஸ். ஆர். மணிகண்டன், ஆர்.சக்தி வேல், ஏ.விஸ்வநாதன், உ.ரமேஷ், பெரி. முருகேசன், மோகன்ராஜ், எம்.ராகுல், எம்.சி.மணி, நகரப் பட்டி கண்ணன், எம்.சரவணன் க.கதிரேசன், ஆ.முகமதுஆரிப் ஆர். விஜய லெட்சுமி ஆ.காந்தி மதி, க.பொன்னழகு, ச. காவேரி, த.வள்ளி, பி. வாசுகி, ம.கலா, ச.சுமதி, பழ. சுந்தராக, வி.மச்சக் காளை, ஏ.அப்துல்லத்தீப், எஸ்.பி. நாகராஜன், ஏ.ஆர். லோகநாதன், பழ.இளைய ராஜா, சின்னத்தம்பி. ரா. மேகநாதன், டி.சுதர்சன், கே.ஆர்.ராமசாமி,

மு.சுப்பிரமணியன், சே.மீனாட்சி சுந்தரம் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பழ. இளையராஜா நன்றி கூறுகிறார்.